# மாற்று பாலின மக்களின் உரிமைகள் குறித்து உச்ச நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பு

**மொழிபெயற்பு : தினேஷ் (அமோகா)**
**தொகுப்பாளர் : தாநிஷ் ஷேக்**

**ஏப்ரல் 15 2014 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு**

இந்த தீர்ப்பானது மூன்றாம் பாலினம் அடையாளம் காணும் மக்களுக்கும் மற்றும் ஒரு அடையாளத்தில் இருந்து மற்றொன்றிற்கு மாற வேண்டும் என்பவர்களுக்கானது (அதாவது ஆணிலிருந்து பெண்ணாக அல்லது பெண்ணிலிருந்து ஆணாக). உச்ச நீதிமன்றம் மத்திய மற்றும் மாநில அரசுகளை ஆண், பெண், மூன்றாம் பாலினம் யாராக இருந்தாலும் அவர்களின் பாலினத்தை அங்கீகரிக்க வேண்டும் என கூறி உள்ளது.

**மூன்றாம் பாலினத்திற்கான சட்ட அங்கீகாரம்:** மூன்றாம் பாலின பிரிவாக அங்கீகரிப்பதில், நீதிமன்றம் ஆண் பெண் போலவே மூன்றாம் பாலின மக்களுக்கும் அடிப்படை உரிமைள் உள்ளது என்பதை அங்கீகரித்துள்ளது. மேலும், திருமணம், தத்தெடுத்தல், விவாகரத்து போன்றவற்றில் மூன்றாம் பாலினத்தை அங்கீகரிக்காமல் இருப்பது, அந்த பாலினத்திற்கு செய்யும் ஒதுக்குதல் ஆகும்

**ஆண்-பெண் ஆகிய இரு பாலினத்திற்குள் மாறும் மக்களுக்காக சட்ட அங்கீகாரம்:** சட்ட அங்கீகாரம் வழங்கப்படும் வழிமுறை குறித்து நீதிமன்றம் தெளிவுபடுத்தி உள்ளது. உடல் சார்ந்த பரிசோதனையை விடுத்து ஒருவரது மனநிலை பரிசோதனை செய்யப்படும். மேலும் நீதிமன்றம் ஒருவரின் பாலினத்தை அங்கீகரிப்பதற்கு பால் மாற்று அறுவை சிகிச்சையை அவர் மேற்கொண்டிருக்கு வேண்டும் என்பதை நிபந்தனையாக சொல்லுவது சட்டப்படி குற்றம் என் சொல்கிறது.

பாலினத்தை அங்கீகரிக்க அரசு குறிப்பாக என்ன வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்பது இன்னும் வரையறுக்கப்பட வேண்டும். ஆயினும் இது குறித்து பயனுள்ள குறியீடுகள் சமூக நீதி மற்றும் மேம்பட்டு அமைச்சகம் அமைத்துள்ள வல்லுநர் குழுவில் கிடைக்பெறலாம். உச்ச நீதிமன்றம் தனது சட்ட அறிவிப்புகளின் அமலாக்கம் அந்த வல்லுநர் குழுவின் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கும்

பரிந்துரைகளை சார்ந்து அமையும் என குறிப்பிட்டுள்ளது. அந்த அறிக்கையானது, அங்கீகாரம் பெற சில குறிப்பிட்ட வழிமுறைகளை பின்பற்றி ஆண், பெண், அல்லது மூன்றாம் பாலினம் ஆகிய எந்த பாலினத்தையும் தேர்வு செய்யும் உரிமை மக்களுக்கு உள்ளது என்றும், மேலும் அதற்கு அறுவை சிகிச்சை அல்லது ஹோர்மோன் சிகிச்சை அவசியம் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளது. இந்த தீர்ப்பு வல்லுநர் குழுமத்தின் பரிந்துரைகளை நடைமுறைபடுத்த அரசுக்கு ஆறு மாத கால அவகாசம் வழங்கி உள்ளது.

<u>குறிப்பிட்ட மற்றும் பொதுவான அறிவிப்புகள்</u>

**பொதுநலம் மற்றும் சுகாதாரம்:** மத்திய மற்றும் மாநில அரசுகள் மாற்று பாலின மக்களுக்கு மருத்துவ கவனிப்பு வழங்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மேலும் அவர்களுக்கென தனிப்பட்ட பொது கழிவறை வழங்க வேண்டும். மேலும் மாற்று பாலின மக்களுக்கென தனி எச். ஐ. வி சதவிகித கணக்கெடுப்பு மையம் நிறுவ வேண்டும்

**சமூக மற்றும் பொருளாதார உரிமைகள்:** மத்திய மற்றும் மாநில அரசுகள் அவர்களை சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பிற்படுத்தப்பட்ட மக்களாக கருத வேண்டும். அவர்களுக்கு பல்வகை சமூக நல திட்டங்களை வழங்க வேண்டும். கல்வி மற்றும் பொது நியமனத்தில் அரசு ஒதுக்கீடு வழங்க வேண்டும்.

**சமூக கறை மற்றும் பொது விழிப்புணர்வு:** மாற்றுபாலின மக்களும் இந்த சமூகத்தில் ஒரு அங்கம் என நினைக்க வேண்டும் பிறர் அவர்களை தீண்ட தகாத மக்களாக பார்க்க கூடாது. இதுகுறித்து மத்திய மற்றும் மாநில அரசுகள் பொது விழுப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டும். மத்திய மற்றும் மாநில அரசுகள் அவர்கள் ஒரு காலத்தில் சமூகத்தில் அனுபவித்த மரியாதை மற்றும் இடத்தை திரும்ப பெற நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். திருநங்கைகள் மற்றும் திருநம்பிகள் சந்திக்கும் பயம், அவமானம், பாலின குழப்பம், சமூக நிர்பந்தம், மன அழுத்தம், தற்கொலை எண்ணங்கள், சமூக கறை போன்ற பிரச்சனைகளை மத்திய மற்றும் மாநில அரசுகள் அவசரமாக தீர்க்க வேண்டும்

இந்த அறிவுப்புகளை சமூக நீதி மற்றும் மேம்பட்டு அமைச்சகம் அமைத்துள்ள வல்லுநர் குழுவின் அறிக்கையுடன் இணைத்து பார்க்க வேண்டும். இது குறித்து அந்த அறிக்கையில் மேலோட்டமாக மட்டுமே குறிப்பிட்டுள்ளதால், நிறைய பரிந்துரைகளை வழங்க வழிவகை உள்ளது

**<u>எதிர்கால சாத்தியங்கள்:</u>**

**பாலியல் சிறுபான்மையின சமூகங்களுக்கு :** நீதிமன்றம் பல இடங்களில் பாலியல்பு மற்றும் பாலின அடையாளம் சார்ந்த ஒதுக்குதல் என்பது அடிப்படை உரிமை மீரல் என்பதை வலியுறுத்தி உள்ளது. இது போன்ற குறிப்புகள் மற்ற பாலியல் சிறுபான்மையினர்கள் சந்திக்கும் ஒதுக்குதலை களைவதற்கு மற்றும் அவர்களின் (திருமண) உறவிற்கான அங்கீகாரம் பெறுதல் போன்றவற்றிற்காகவும் பயன்படும் சாத்தியங்கள் உள்ளது.

பாலின அடையாளம் சார்ந்த ஒதுக்குதல் பற்றி நீதிமன்றம் குறிப்பிடுகையில்: பாலின ஒதுக்குதலுக்கு எதிரான உரிமை என்பது இரு (ஆண்-பெண்) பாலின கட்டமைப்புகளிலும் ஒத்துப்போகாமல் இருக்கும் மக்கள் என்னும் காரணத்திற்காகவே அவர்களை வித்தியாசமாக நடத்தும் நேரடி மற்றும் மறைமுக மனப்பான்மையை தடுப்பதற்காக இருப்பது. இந்த வாதத்தை 'எதிர் பாலின மக்களின் மேல் மட்டுமே ஈர்ப்பு கொள்ள வேண்டும்' என்னும் பாலின கட்டமைப்பு விதிகளுக்கு ஒத்துப்போகாமல் இருக்கும் ஆண்கள், பெண்கள் மீது வேலை இடங்களில் நிகழும் ஒதுக்குதலுக்கு எதிராகவும் பயன்படுத்தலாம்.

**மற்ற பலவீனமான குழுக்களுக்கு :** எதாவது உலக கோட்பாடுகள் அடிப்படை மனித உரிமைகளுக்கு ஒத்துப்போகும் பட்சத்தில் கண்டிப்பாக அதை அடிப்படை அரசியல் சட்டத்தில் உள்ள அம்சங்களில் அடக்க வேண்டும். அது அடிப்படை மனித உரிமைளின் பயனை விசாலப்படுத்துவதாக இருக்கும். நீதிமன்றத்திற்கு பாலியல்பு மற்றும் பாலின அடையாளம் தொடர்பான ***<u>யோக்ய கர்டா</u>*** கொள்கைகள் [Yogyakarta principles] **உட்பட உள்ள உலக கோட்பாடுகள் பற்றிய புரிதல் நீதிமன்றத்திற்கு இருப்பது தெறிகிறது. இந்த புரிதலானது இந்திய நீதிமன்றங்கள் உலக கோட் பாடுகளை (அதற்கு முரணான சட்டம் நாட்டில் ஏற்கனவே இல்லாமல் இருக்கும் பட்சத்தில்) ஏற்க வழிவகுக்கும்**

**பிரிவு 377-யை மாற்றி அமைக்க :** இந்த தீர்ப்பு ஏற்கனவே சுரேஷ் குமார் கௌஷல் பிரிவு 377 குறித்து வழங்கிய தீர்ப்பிற்கு கீழ்கண்ட வகையில் முரணாக உள்ளது:

பிரிவு 377 குறிப்பிட்ட பாலியல் நடத்தைகளுக்கு தொடர்புடையதாக இருந்தாலம் ஹிஜ்ரா போன்ற சில பாலியல் அடையாளங்களை தெளிவாக குறிப்பிட்டுள்ளது. மேலும் பிரிவு 377-யை பயன்படுத்தி ஹிஜ்ராஸ் மற்றும் மாற்று பாலின மக்களுக்கு வன்கொடுமை மற்றும் பாலியல் தொந்தரவு செய்யப்படுவதை ஏற்கிறது. பிரிவு 377 உண்மையில் என்ன சொல்கிறது என்பதை கணக்கில் விடுத்து அது தவறாக

பயன்படுத்தபடுவதாக சொல்கிறது நீதிமன்றம். இதன்மூலம் நீதிமன்றம் அடிப்படை உரிமைகள் சார்ந்த கோட்பாடுகளை போதிய அளவு பயன்படுத்தமால் இருப்பாதாக தெறிகிறது. அந்த வகையில் இந்த தீர்ப்பு தெளிவான முரணை வெளிப்படுத்துகிறது.

இந்த தீர்ப்பு மாற்று பாலின மக்கள் எண்ணிக்கையில் சிறிய தாக இருந்தாலும் அவர்களும் மனிதர்களே. அவர்களுக்க மனித உரிமைகளை அனுபவிக்கும் அனைத்து உரிமைகளும் உண்டு. இந்த வாதம் கௌஷல்-ன் "miniscule minority" வாதத்திற்கு எதிரானது. நீதிமன்றம் பாலியல்பு மற்றும் பாலின அடையாளம் சார்ந்த ஒதுக்குதல் என்பது சரத்து 14 எதிரானது ஆகும். மாற்று பாலின மக்கள் வன்முறை, பாலியல் தொந்தரவு போன்றவற்றிற்கு பொது இடங்கள், வீடு, சிறை போன்ற இடங்களில் பெரிதும் ஆளாகிறார்கள். பிரிவு 377 மாற்று பாலின மக்களுக்கு வன்முறை மற்றும் பாலியல் தொந்தரவு அளிக்க பயன்படுத்தபடுகிறது என்பது இதன் மூலம் தெறிகிறது. எனவே பிரிவு 377 இந்திய அடிப்படை அரசியல் சட்டத்தின் கீழ் பின்பற்ற வேண்டிய சமத்துவத்தை மறுக்கிறது என்பது தெளிவாக தெறிகிறது.

ORINAM.NET
orinam

For further documentation, including the full-text of the judgement, go to http://orinam.net/resources-for/law-and-enforcement/nalsa-petition-tg-rights-india/